## இந்திய – சீன உறவின் அவசியங்கள்

இந்தியா எப்பாடுபட்டாவது என்ன விலை கொடுத்தாவது சீனாவுடன் உண்மையான நட்பு நிலவ முயற்சிக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்தியா நிம்மதியாக வாழ முடியும். உலகின் சில பெரும் நாடுகளின் தந்திரங்கள், ஊளைகள் இருந்த இடம் தெரியாமல் ஆகிவிடும். காஷ்மீர் உள்பட அனைத்துப் பிரச்சினைகளும் தானாகவே ஒழியும். மற்ற உலக நாட்டுப் பிரச்சினைகளைப் பற்றி இந்தியாவுக்கு முக்கியமில்லை. தன் சிக்கலைத் தீர்த்துக் கொள்வதில் மட்டுமே அதீத தீவிரம் வேண்டும்.

உதாரணமாக சீனா ஒரு நிலைக்கு வரும் வரை அடுத்த நாடுகள் பற்றி கவலை கொள்ள வில்லை. அவற்றில் மூக்கை நுழைக்கவோ தலையீடு செய்யவோ இல்லை. இன்று அந்த நாடு நல்ல பொருளாதார நிலைக்கு வந்த பிறகு உலக நாடுகள் சீனாவைக் கண்டு அஞ்சுகின்றன. இதனால் அந்நாடுகள் சூழ்ச்சித் தந்திரங்களுடன் இந்தியாவுடன் பொய்யும் கலந்த உறவு கொண்டாடுகின்றன.

இதையெல்லாம் இந்தியா புரிந்து கொண்டு ஆதாயம் கிடைக்கும் வரை அனுபவித்துக் கொள்ள வேண்டும். சீனாவின் நிலப்பரப்பு, மக்கள் தொகை, பொருளாதார நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இப்பிராந்தியத்தில் அதற்கு முதல்நிலை கொடுத்து அதை மனதார இந்தியா ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. இதுவே அரசியல் ராஜதந்திரமாகும்.

ஒருவரை இயற்கையாக அல்லது செயற்கையாக மனதாரப் புகழ்ந்தால் புகழ்பவரை புகழப்படுபவர் விரும்புவது நிச்சயம் நடக்கம். அதைவிடுத்து இந்தியா இப்பிராந்திய முதல்நிலைக்குப் போட்டி போடுவது நியாயமாகாது. அமெரிக்கா போன்ற தொலை தூரத்திலிருக்கும் நயவஞ்சகர்களையும் அதிகமாக இங்கு மேய விடுவது தவறாகும். அது இந்தியா பாகிஸ்தான் பகையை சீனாவைவிட கூடுதலாக பராமரித்து வருவது அனைவருக்கும் புரிந்துதான் இருக்கிறது.

ஒருநாள் அமெரிக்கா என்ற நாடு கூட அழிக்கப்படலாம். அன்றைய அதன் குடிமக்கள் துன்பங்களுக்கும் வறுமைக்கும் ஆளாகலாம். கெடுவான் கேடு நினைப்பான். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற ஞானியின் அமுத மொழிகளுக்கு நல்ல நல்ல உதாரணம் கிடைக்கலாம்.

இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளும் உலகத்தின் பலநாட்டு மக்களை கொன்று குவித்தவர்கள். ஆப்பிரிக்கர்கள், யூதர்கள் லட்சம் கோடிகளால் கொல்லப்பட்டதற்கும் தற்போது இஸ்லாமியர்கள் பல நாடுகளில் இறப்பதற்கும் இவர்களுக்குள் முன்னர் இருந்த பகை, தற்போதைய நட்பு காரணமாகியது.

நாடுகளின் தன்னலம், தலைவர்களின் கௌரவம், பெருமை பலவகையான இடைஞ்சல்கள், பயத்தினால் தவறான எதிர்பார்ப்பினால் எழுந்த எண்ணங்கள் இந்தியா, சீனா ஆகிய நாடுகள் நடந்து கொண்ட விதங்கள் பல சிக்கல்களை உண்டு பண்ணின. அவை தங்கள் நிலப்பரப்பை விரிவு படுத்தி பெரிய நாடாக்கிட துடித்த நிலைகள், அண்டை நாடுகளுடன் கூட்டு சேர்வதில் போட்டா போட்டிகள் அவைகளுக்குள் நிரந்தர நிழல் பகையைத் தோற்றுவித்தது.

இச்சூழ்நிலையில் சிறிய நாடுகள், பெரிய நாடுகளைப் பயன்படுத்திக் கொண்ட முறைகளினால் பெரிய நாடுகள், சிறிய நாடுகளை போட்டி போட்டுக் கொண்டு கவர்வதற்கு முயற்சித்தன. விருப்பமில்லாத விரும்பப்படாத சேர்ப்புகள், தவறாகிப் போன கணக்குகள் இந்தியா போன்ற நாடுகளுக்கு சில நிரந்தரத் தொல்லைகளை வழங்கியிருக்கின்றன. மற்ற நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி முன்னேறத் துடிக்கும் குணமுடைய உலக அரங்கில், தலைவர்கள் தங்களையும் தங்கள் நாட்டையும் பெருமைப்படுத்திக் கொள்ளும் முயற்சிகள் எந்நாளும் நடக்கின்றன.

நாடுகளின் முக்கிய ஆரம்பகால தலைவர்களின் தனிப்பட்ட விருப்பங்கள் அந்நாடுகளின் கொள்கையாகின. தன் நாடு, மத, மக்கள் நாட்டின் பொருளாதாரம், உயர்வு, பலம், அதிகாரம், அந்தஸ்து, பெருமை என நாடுகளும் தலைவர்களும் தன்னலத்தை மட்டுமே கருதும் மனப்பாங்கு மேலோங்கி நிற்கின்றது.

இந்தியாவுக்கு உண்மையான வலிமையான நட்பு நாடு இல்லாமல் அண்டை நாடுகளுடன் நிழல் பகையே அதிகம் நிலவுகிறது. இத்தனைக்கும் இந்தியர்கள் கடல் கடந்து சில அண்டை நாடுகளில் அதிகம் குடியேறியிருக்கின்றனர். ஆனால் அம்மக்களால் இந்தியாவுக்கு நன்மை ஏற்படுவதற்கும் பதிலாக அவர்கள்

வாழும் நாடுகளுடன் பகை உண்டாவதற்கான காரணமாகிவிட்டது. மேலும் உள் நாட்டில் பல நிற, குண, இன வகை மக்கள் வாழ்ந்து வருவதால் பிரச்சனைகள் எப்பொழுதும் இருந்து வருகின்றன.

இனிமேல் சீனாவை எத்துறையிலும் இந்தியா மிஞ்ச முடியாது. சீனாவின் பலத்தை இந்தியா ஏற்றுக் கொண்டு சீனாவை போற்ற வேண்டும். அதன் முன்னேற்றத்தை, பெருமையை, உறுதி நிலையைத் தொடர்ந்து புகழ்ந்து வரவேண்டும். இதன்மூலம் சீனாவின் மனநிலையில் மாறுதல்கள் வரலாம்.

இந்தியாவும், சீனாவும் நெருங்கி இணைந்து விட்டால் உலகில் மற்ற நாடுகள் அடங்கிப் போகும். இதற்கு இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்டுகளை நன்கு பயன்படுத்தலாம். இவ்வணியில் ரஷ்யா, ஆசிய நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள், தென் அமெரிக்க நாடுகள், ஐரோப்பாவில் சில நடுநிலை/அதிருப்தி என பெருங்கூட்டமே சேர்ந்துவிடும்.

## இந்திய பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான வரலாற்றுச் சூழ்நிலை

எட்டாம் நூற்றாண்டு காலத்திலிருந்தே அரேபியர்கள் சிந்து மாகாணத்தை கைப்பற்றிய திலிருந்து இரு மத மக்கள் மாறுபாடான நிலை கொள்ளுமாறு அமைந்து விட்டது. பாகிஸ்தான் ஒரு மத நாடாக விளங்கி இந்து, சீக்கிய சிறுபான்மையினரை 'க்பிரிஸ்' என வேற்றுமையாக அழைக்கப்பட்டு பாதுகாப்பில்லாமல் வாழும் நிலை இந்து வருகிறது.

இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையில் சுதந்திரத்திற்கு முன்பான மத ரீதியிலான பகையின் காரணமாக சுதந்திரத்தின் போது இரு நாடுகளாக பிரிக்கப்பட்டு பாகிஸ்தான் முஸ்லிம் பெரும்பான்மை நாடாகியது. பிரிவினையின் போது, பொதுமக்கள் இடம் பெயர்தல் நிகழ்வு நடந்து பெரும் துண்பம் சிக்கல்களுக்கு உள்ளாயினர். 1950 முதல் 10 ஆண்டுகள் அகதிகளாக இந்தியாவிற்கு வருகை தந்தனர். இதனால் இந்தியா பாகிஸ்தான் உறவில் ஒரு பாதிப்பு ஏற்பட காரணமாயிருந்தது.

பிரிவினையின் போது 40 லட்சம் முஸ்லிம்கள் இந்தியாவில் தங்கிவிட்டனர். 12 லட்சம் இந்துக்கள் பாகிஸ்தானிலிருந்து இந்தியா வந்தனர். 10 லட்சம் இந்துக்கள் இடம் பெயர இயலாமல் பாகிஸ்தானிலேயே தங்கிவிட்டனர். மேலும் 10 லட்சம் முஸ்லிம் அல்லாதவர்களும் இந்தியா வந்தனர். ஆனால் பாகிஸ்தான் சென்ற முஸ்லிம்கள் 2½ லட்சம் பேர் மட்டுமே. இதனாலும் மறைமுகமான கசப்புணர்வு, காழ்புணர்ச்சி, பழியுணர்வு, பகையுணர்வு உண்டாகி இன்றுவரை தீரவில்லை.

11.09.1960ல் இண்டஸ் வாட்டர் டிரீட்டி (சிந்து நீர் உடன்படிக்கை) செய்யப்பட்டு சட்லஜ், பீஸ், ரபி நதிகளின் நீர்களை இந்தியாவிற்குத் தர சம்மதித்தும், ஜீலம், சினாப், சிந்து நதி நீர்களை பாகிஸ்தானுக்கு தரவும் ஒப்பந்தமானது. மேலும் சட்லஜ் நதி நீருக்கு தக்க விலை தரவும் ஒத்துக்கொள்ளப்பட்டது. பராக்கா அணை, எல்லைப்பிரச்சனை போன்றவைகளில் ராட்சிய தீர்ப்பின்படி ஏற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறான முக்கால நிகழ்வுகளின் தாக்கத்துடன் பின்னாளில் ஏற்பட்ட சிக்கல்களுடன் சேர்ந்து இன்றைய இந்திய பாகிஸ்தான் உறவு நிலையில் எப்பொழுதும் பின்னடைவே ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.